Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

# வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

**Vol. 65** பிரபுக்களையும், இரட்சிக்கத் திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள் சங்.146:3 டிசம்பர் 2019 No.12

## சபையின் தேவை பெந்தெகோஸ்தின் வல்லமையால் புதுவாழ்வை அடைவதாகும்

***The Church needs a renewal of the power of pentecost***

James A Stewart

உலகின் வெவ்வேறு பகுதிகளில் வாழும் தேவபிள்ளைகளின் உண்மையான ஆவிக்குரிய நிலையை வரையறுப்பது எளிதல்ல. உற்சாகமூட்டும் பல அடையாளங்கள் காணப்பட்டாலும் நாம் ஆரோக்கியமானதும், பிரகாசமானதும், வல்லமை நிறைந்ததுமான கிறிஸ்தவ வாழ்வு வாழவில்லை என்பதை எவரும் மறுக்க முடியாது.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சாதாரணத்திற்கும் தாழ்வான கிறிஸ்தவ வாழ்விலேயே காணப்படுகின்றனர். புதிய ஏற்பாட்டில் காணப்படும் மேற்கொள்ளமுடியாத வல்லமை, சொல்லி விவரிக்க முடியாத சந்தோஷம், அளவில்லாத மகிமை, அறிந்துகொள்ள முடியாத சமாதானம் ஆகிய பண்புகள் அவர்களில் குறைவுபடுகிறது. சபையின் கிறிஸ்தவ அனுபவம் தன் சொந்த தேவைகளை சந்திக்கும் அளவிற்கு ஆழமானதாகவும் ஊக்கமானதாகவும், வலுவானதாகவும் காணப்படவில்லை.

"வெட்டுக்கிளி போன்ற ஒரு சபை யூதாக் கோத்திர சிங்கத்தின் வலிமைக்கு தாக்கமுள்ள சாட்சியாயிருக்கவே முடியாது"

### சபை விழிப்படைய வேண்டும்

உலகத்தை இரட்சிக்க சபை இரட்சிப்படைய வேண்டும். கடந்த காலங்களில் ஏற்பட்ட உத்தம தேவ அசைவாடுதல்களின் உறுதியின் நியதி இதுவே. தன்னிடமில்லாத ஒன்றை சபை பிறருக்கு அளிக்க முடியாது. வெளியே அளிக்கப்படும் அளவு, உள்ளே இருப்பதை ஒத்தே இருக்க முடியும். அப்போஸ்தலர் காலத்திலிருந்த அளவிலான வல்லமை இன்றும் அப்போஸ்தலர் காலம் போலவே இருக்க வேண்டும்.

ஆனால் சபை விளம்பரம் போன்றவற்றிற்கு அதிக பணத்தைச் செலவு பண்ணுவதாலும் அதன் மூலம் தனது நடைமுறைகளை பிரஸ்தாபப் படுத்துவதாலும் தன்னைச் சுற்றிலும் ஒரு புகைமண்டலத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் தலைவர்கள் ஹாலிவுட் நட்சத்திரங்களை போல குளிர்காய்ந்து கொண்டிருக்கிறார்கள். பிரகடனங்களின் இயந்திர ஒலி ஆவியானவரின் மெல்லிய ஒலிக்கு மேலாக எழும்புகிறது. மனிதர் மற்றும் இயக்கங்களின் புகழ் இரட்சகரின் புகழைவிட அதிகமாகக் காணப் படுகிறது.

நமது வாழ்விலும் உழைப்பிலும் தாமாகச் செய்யும் ஆசை சிறிதுமில்லை. சத்தம், விளம்பரம், சிறப்பான ஸ்தாபனங்கள் ஆகியவற்றால் ஏற்படும் விளைவுகளே அதிகம். ஸ்தாபனத்தின் கட்டமைப்பு எடுக்கப்பட்டுவிட்டால் ஏற்படும் விளைவு சிறிதளவாகவும் ஏமாற்றமளிப்பதுமாகவே இருக்கும்.

தானாகவே இயங்குவதுதான் பெந்தெகோஸ்தின் மகிமை. பெந்தெகோஸ்தே நாளில் ஏற்பட்ட எழுப்புதல் இயற்கையானதும் சுவிசேஷப்பணியின் ஒரு முயற்சியுமாகும். பேதுரு மற்றும் அப்போஸ்தலர்கள் போன்ற விசேஷித்த பேச்சாளர்களின் விளம்பரம் அங்கு இல்லை. திட்டமிடப்பட்ட எந்த முறையான சுவிசேஷப் பணியுமிருக்கவில்லை. அந்த முதல்முதலான மிகப்பரிசுத்த எழுப்புதல் காத்திருந்த சபையால் தூய ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட அனுபவமாகும். இத்தவிர்க்கமுடியாத விளைவினை, "அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் (சபையில்) சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" அப்.2:41 என்ற வசனத்தால் அறிகிறோம். அல்லேலூயா! தேவ அக்கினி இறங்கியது.

ஏசாயாவின் தீர்க்கதரிசன ஒலி, நம்மை அழைப்பதை ஏசா.52:1-2 வசனங்களில் படிப்போம். "எழும்பு, எழும்பு சீயோனே உன் வல்லமையை தரித்துக்கொள். எருசலேமே உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக் கொள். ...... தூசியை உதறிவிட்டு எழுந்திரு. சீயோன் குமாரத்தியே உன் கழுத்திலுள்ள கட்டுகளை அவிழ்த்துவிடு."

சபை தூங்கிக்கொண்டிருக்கும் ஒரு மிகப்பெரிய அரக்கனைப் போலிருக்கிறது. புயல்காற்றின்போது கப்பலில் தூங்கிக் கொண்டிருந்த யோனாவுக்கு நிகராயிருக்கிறது. கெத்சமனே தோட்டத்தில் தூங்கிய சீஷர்களுக்கொப்பாயிருக்கிறது. எனவே இப்போது அவசர தேவை எக்காளம் ஊதுகிறவர்களே.

இங்கு கூறப்படும் சவாலையும், கண்டிப்பையும் பாருங்கள். "எருசலேமே, பரிசுத்த நகரமே! சிறைப்பட்டுப் போன சீயோன் குமாரத்தியே, எழுந்திரு, வஸ்திரத்தை உடுத்திக்கொள், தூசியை உதறிவிடு, கட்டுகளை அவிழ்த்திவிடு". தேவன் கனம் பண்ணாதவர்களின் நிலைமை என்ன? "சிறைப்பட்டுப்போன சீயோனின் குமாரத்தி!" சபை சமரசத்தால் இரட்சகரின் அருமையான பெயரை தூளுக்கு இழுத்து வந்திருக்கிறது. எனவே அவள் சிறையிருப்பிலிருக்கிறாள். சபையின் பாவம் அது பூமியோடு கட்டப்பட்டிருப்பதாகும். "தூசியை உதறி விட்டு எழுந்திரு".

"எழும்பு, எழும்பு, பெலன் கொள்; கர்த்தரின் புயமே, முந்தின நாட்களிலும் பூர்வ தலைமுறைகளிலும் எழும்பினபடி எழும்பு" ஏசா.51:9. "எழும்பு எழும்பு சீயோனே, உன் வல்லமையைத் தரித்துக்கொள்" ஏசா.52:1.

ஆண்டவர் உறங்கவில்லை, அவருடைய ஜனங்கள்தான் உறங்குகிறார்கள். நாம் மனந்திரும்பி தேவனோடு ஒப்புரவாக வேண்டும். நம்மைத் தாழ்த்தி இரட்டை உடுத்தி, தூளிலும் சாம்பலிலும் உட்கார வேண்டும். "சீயோனே உன் வல்லமையை தரித்துக் கொள்". வல்லமையின் உடை பெந்தெகோஸ்தின் வாசலில் தொங்குகிறது அப்.1:8. நாம் உணவு விடுதியில் உணவுப் பட்டியலைப் பார்த்துவிட்டு வேண்டியதைக் கேட்காதவர்கள் போல காணப்படுகிறோம்.

"என்னை விசுவாசிக்கிறவனிடமிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவா.7:38. நம்மிலுள்ள ஆதாரத்தை நாம் உரிமையாக்கிக் கொள்ள வேண்டும். அவை வற்றிப் போகவில்லை. சபையின் வல்லமை அப்போஸ்தலர் காலம் போலவே இருக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் சபை, சத்தியத்திற்கு தூணாகவும் ஆதாரமாகவுமிருக்கிறது. அது தெய்வீக கலைவல்லுநராகிய தேவனிடமிருந்து பரிசுத்தமான மகிமையுடன் கறைபடாமல் வந்துள்ளது. ஆனால் விரைவில் அதன் ஒளி இருளடைந்து அழகு கறைப்பட்டது. ஆயினும் தேவனிடமிருந்து ஏற்பட்ட எழுப்புதல்களின் காலங்களின் மூலம் சபை பிறந்த காலத்தில் ஏற்பட்ட பெந்தெகோஸ்தே நாட்களில் எப்படி இருந்தது என்பதை உணர முடிந்தது.

முதல் நூற்றாண்டில் சபையில் காணப்பட்ட வல்லமை ஏற்படக் காரணம் என்ன? சில சாதாரண மனிதர் அதாவது அறியப்படாதவர்களும் மிகவும் அற்பமானவர்களும், எளிய உபகரணங்களை மட்டும் உடையவர்களும், பயங்கரமான கொடிய எதிர்ப்புகள், பாடுகள், வெறுப்புகளின் மத்தியில் வாழ்ந்தவர்களுமான சிலர்தான் "உலகத்

(4-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

## இம்மாத பொன்னான சிந்தனை

"நமது" தலைவலி, இடுப்பு வலி, கால்வலியைப் பற்றித்தான் நமக்குக் கவலை; "இறைவனது" இதய வேதனையை உணருவது யாரோ?

## வாக்குத்தத்தம்

என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் 2 கொரி. 12:9

### கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

*2019 டிசம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும் தாழ்மையுடனும் துதிக்கிறேன். "அப்பொழுது சாமுவேல் ஒரு கல்லை எடுத்து, மிஸ்பாவுக்கும் சேணுக்கும் நடுவாக நிறுத்தி,* **இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார்** *என்று சொல்லி, அதற்கு* **எபெனேசர்** *என்று பேரிட்டான்" 1 சாமுவேல் 7:12.*

### வாசகர் கடிதம் :

*ஐயா,*

*1.10.19 அன்று எனக்கு 83 வயது நிறைவடைகிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தேவதாசன் ஐயா காலத்தில் இருந்தே 'வருகையின் தூதன்' பத்திரிகை படித்து அவருடைய பிரசங்கங்களை நாசரேத்தில் கேட்டு பயனடைந்துள்ளேன். திருமணத்துக்குப் பின் நெய்வேலியில் ஐயாவிடம் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியின் வல்லமை, புது பெலன் பெற்று இன்றுவரை 'வருகையின்தூதன்' படித்து பயனடைகிறேன். 'எழுப்புதலுக்காக இதய கதறல்' நானும் ஒரு பங்காளி. எனக்காக, விசேஷமாக கண்பார்வைக்காக ஜெபியுங்கள்.*

*நீங்கள் நல்ல சுகபெலனுடன் நீண்ட காலம் ஊழியம் செய்ய ஜெபிக்கிறேன். நானும் இந்த 83 வயது வரை என்னால் இயன்ற பணிகளைச் செய்து வருகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.* *சகோதரி* **M.S.**

### நவம்பர் மாதம் எழுதிய செய்தியின் சுருக்கம்:

**I அவர்கள் இருவரும் கர்த்தரிட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்.** *லூக்கா 1:6*

**தேவன்** சிலரைக்குறித்து இவ்விதமாக சாட்சி கொடுக்கிறார் :

**1. நீதிமானென்று சாட்சி** *எபிரேயர் 11:4*

**2. பிரியமானவனென்று சாட்சி** *எபிரேயர் 11:5.*

**3. பயபக்தியுள்ளவனென்று சாட்சி** *எபிரேயர் 11:7.*

**4. கீழ்ப்படிதலுள்ளவனென்று சாட்சி** *எபிரேயர் 11:8.*

**5. உண்மையுள்ளவனென்று சாட்சி** *எபிரேயர் 3:2,5.*

**6. தேவனுக்குப் பயப்படுகிறவனென்று சாட்சி** *யோபு.1:1,8.*

**7. கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவனென்று சாட்சி** *1 சாமுவேல் 13:14*

**II எலிசபெத்து மலடியாயிருந்தபடியினால், அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது:** *லூக்கா 1:7*

### மலடியாயிருந்த 7 பேர்

**1. சாராள்** *ஆதி.16:1*

இந்த சம்பவத்தில் முதலாவது தேவன், இரண்டாவது ஆபிரகாம், மூன்றாவது சாராள் சொல்லுகிற வார்த்தைகளை கவனிப்போம்.

**தேவன் :** நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் ஆதி.12:2.

And I will make of thee a great nation, and I will bless thee, and make thy name great; and thou shalt be a blessing.

அவர் அவனை வெளியே அழைத்து : நீ வானத்தை அண்ணாந்து பார்; நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால் அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி : உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார் ஆதி.15:5.

**ஆபிரகாம் :** அதற்கு ஆபிரகாம் : கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே; .... என்றான் ஆதி.15:2.

அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து : நூறு வயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ? என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டு,

இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக! என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினான் ஆதி.17:17,18.

**சாராள் :** சாராள் ஆபிரகாமை நோக்கி : நான் பிள்ளை பெறாதபடிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்; என் அடிமைப் பெண்ணோடே சேரும்; **ஒரு வேளை** அவளால் என் வீடு கட்டப்படும் என்றாள் ஆதி.16:2.

ஆகையால் சாராள் தன் உள்ளத்திலே நகைத்து: நான் கிழவியும், என் ஆண்டவன் முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ என்றாள் ஆதி.18:12.

**ஆனால் –**

"கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள் பேரில் கடாட்சமானார்; கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளினார்.

ஆபிரகாம் முதிர் வயதாயிருக்கையில், சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்.

அப்பொழுது சாராள் : தேவன் என்னை **நகைக்கப் பண்ணினார்;** இதைக் கேட்கிற யாவரும் என்னோடேகூட **நகைப்பார்கள்.**

சாராள் பிள்ளைகளுக்கு பால் கொடுப்பாள் என்று ஆபிரகாமுக்கு எவன் சொல்லுவான்? அவருடைய முதிர் வயதிலே அவருக்கு ஒரு குமாரனைப் பெற்றேனே என்றாள்" ஆதி.21:1,2,6,7.

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, ஆபிரகாமைக் குறித்து அநேக செய்திகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இந்த ஆபிரகாம் யார்?

"ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு :" என்று புதிய ஏற்பாடு ஆரம்பமாகிறது.

(3-ம் பக்கம் பார்க்க)

கடிதங்கள், காணிக்கை அனுப்ப வேண்டிய முகவரி :
வருகையின் தூதன், நியூபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008, 9489740295, e-mail:Varukayinthoothan@hotmail.com

**வருகையின் தூதன் ஊழியங்களின் தேவை மாதம் ரூபாய் 1 லட்சம். ஆண்டவர் உங்களை ஏவுகிறபடி உதாரத்துவமாய் உதவுங்கள்.**

**வங்கி கணக்கு :**

| | |
|---|---|
| பத்திரிகை : | **VARUKAYIN THOOTHAN,** A/c. No.:431521036<br>Indian Bank,W.C.C. Road, Nagercoil-1<br>IFS Code : IDIB000N006 |
| உபவாச ஜெபம் : | **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557<br>I.O.B., Court Road, Nagercoil-1<br>IFSC Code : IOBA0000063 |
| முன்னேற்றப்பணி : | **WESLEY DEVADASON,** A/c. No.: 61822200136904<br>Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1<br>IFSC Code : SYNB0006182 |

(2-ம் பக்க தொடர்ச்சி)

அடியானுடைய வாழ்க்கையில் நான் சொப்பனத்தில் கூட காணாத காரியங்களை கர்த்தர் எனக்குச் செய்தார். I never ask, I never dream, I never expect. நான் கேட்கவில்லை, எதிர் பார்க்கவில்லை, சொப்பனம் கூட காணவில்லை.

சீயோனின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்பும் போது, சொப்பனம் காண்கிறவர்கள் போல் இருந்தோம்.

அப்பொழுது நம்முடைய வாய் **நகைப்பினாலும்**, நம்முடைய நாவு ஆனந்த சத்தத்தினாலும் நிறைந்திருந்தது; சங்கீதம் 126:1,2.

"கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?" ஆதி.18:14.

"இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" எரேமியா 32:27.

"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாதது மான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" எரேமியா 33:3. அல்லேலூயா!

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
**வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008

## எழுப்புதலுக்காக இதய கதறல் 2020
## Heart cry for Revival 2020

| மாதம் | தேதி | இடம் |
|---|---|---|
| ஜனவரி | 04.01.2020<br>1-வது சனி | NIMS Church<br>Sundarapandiam |
| பெப்ரவரி | 08.02.2020<br>2-வது சனி | Christian Assembly Mission<br>Ayanavaram, Chennai |
| மார்ச் | | |
| ஏப்ரல் | | |
| மே | | |
| ஜுன் | | |
| ஜுலை | | |
| ஆகஸ்ட் | | |
| செப்டம்பர் | 19.09.2020<br>3-வது சனி | Jesus Cares Assembly<br>Anna Nagar, Chennai |
| அக்டோபர் | | |
| நவம்பர் | | |
| டிசம்பர் | | |

**தமிழ்நாட்டிலுள்ள ஊழியர்கள், உங்கள் சபை கட்டிடத்தை ஒரே ஒரு விசை மாத்திரம் எழுப்புதலுக்காக இதய கதறல் 7 மணி நேர உபவாச ஜெபத்திற்கு திறந்து தாருங்கள் என்று அதிக அன்போடு கேட்கிறேன்.**

தொடர்பு : **94897 40295, 94980 30295**

## ஜனவரி மாத உபவாச ஜெபம்

***Heart cry for Holy Spirit Revival***

## எழுப்புதலுக்காக இதய கதறல் 2020

**(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)**

காலம் : ***04.01.2020*** 1-வது சனிக்கிழமை
சமயம் : காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை
இடம் : **நிம்ஸ் சபை,** சுந்தரபாண்டியம்

தொடர்பு : பாஸ்டர் **E. அற்புதராஜ்**
மொபைல் : **97860 78840**

## அறிவிப்புகள்

1. வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.
2. வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் காணிக்கை அனுப்புகிற தேவனுடைய பிள்ளைகள், குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்பும்படி அதிக அன்பாய் கேட்கிறேன்.
3. ஒவ்வொரு தடவையும் நீங்கள் காணிக்கை அனுப்பும்போது, எங்கள் வசதிக்காக தயவுசெய்து கீழ்காணும் விபரங்களை கட்டாயம் எழுதுங்கள்.

   பதிவு எண் ..........................................................................
   பெயர் ..........................................................................
   முகவரி ........................................ பின்கோடு..................
   போன்/மொபைல் ..........................................................
4. நாங்கள் இதுவரை யாருக்கும் பத்திரிகை அனுப்புவதை நிறுத்தவில்லை. பத்திரிகை வரத்தவறினால் உடனே எங்களுக்கு தெரிவியுங்கள், கொரியர் மூலம் அனுப்புவோம்.
5. வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால் தயவாய் எங்களுக்கு உடனே தெரிவியுங்கள். நன்றி.

## ஆவியின் நிறைவுக்காக விசுவாசமும் எதிர்பார்ப்பும்

***Faith and Expectation for the fullness of the Spirit***

Rich Carmicheal

நம்மைச் சுற்றிலும் இன்று வாழும் மக்கள் தேவனுடைய ஜீவனையும் வல்லமையையும் உங்களிலும் உங்கள் மூலமாகவும் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கவில்லையா?

தூய ஆவியானவரின் அதிக அளவிலான நிரப்புதலைப் பெற மிகப்பெரிய விசுவாசம் வேண்டும். இதற்கு ஒரு காரணம் தேவனுடைய சித்தம். 'நாம் ஆவியால் நிரம்ப வேண்டும்' எபே.5:18 என்று அறிகிறோம். இன்னொன்று அது ஆண்டவரது வாக்குத்தத்தம். "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்" அப்.1:8.

இதைக் குறித்து "நமக்கு உற்சாகமளிக்கும் வாக்குத்தத் தங்கள் எப்போதும் நன்மையானவைகளே. ஆனால் அது தேவனால் கொடுக்கப்படும்போது இன்னும் அதிக நன்மையாயிருக்கும். ஏனெனில் அவர் தமது வார்த்தையின்படி செய்கிறவர்" என்று லாயிஸ் ஸ்டூக்கி எழுதியிருக்கிறார்கள். மேலும் "தேவன் தமது ஆவியின் வரத்தை நமக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார். நாம் விசுவாசித்து அதைப் பெற்றுக் கொள்வது அவசியம். தமது குமாரனை நமக்கு ஈவாக அளித்த தேவன் தமது ஆவியையும் ஈவாக அளித்துள்ளார். இதன் மூலம் அவரது ஜனங்களாகிய நாமும், சபையும் இரட்சிப்பைப் பெற்று அவர் நமக்களிக்கும் பணியைச் செய்ய தரிப்பிக்கப்பட வேண்டும்" எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

தூய ஆவியானவரின் வல்லமையாகிய உலகிலேயே மிகப்பெரிய வல்லமையை நாடுகிறீர்களா? உலகமெங்கும் சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல வேண்டுமே என்று அவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். நம்முடைய அருமை ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவுக்காக நாம் செய்ய வேண்டியவைகளைச் செய்ய ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

### நமது தயாள சிந்தையுள்ள பரமபிதா

நமது பரமபிதா மிகவும் தயாள சிந்தை உடையவரா யிருப்பதால் நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட ஆண்டவரை முற்றிலும் எதிர்பார்க்கலாம் (லூக்.11:13 படிக்க) விடாப் பிடியாக நாம் ஜெபிக்க வேண்டும். "அவர் கேட்கிறவர்களுக்குக் கொடுக்கிறவரும், தேடுகிறவர்கள் கண்டடையச் செய்கிற வரும், தட்டுகிறவர்களுக்குத் திறக்கிறவருமாயிருக்கிறார் லூக்.11:1-13. எனவே தூய ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள நமது பரம பிதாவிடம் கேட்போம், தேடுவோம், தட்டுவோம்.

(1-ம் பக்க தொடர்ச்சி)

தைத் தலைகீழாக மாற்றினர்". துன்புறுத்தல்கள் அலை அலையாக அவர்கள் மீது மோதியும் அவர்கள் வெற்றிகரமாக வெளியே வந்தார்கள்.

அப்போஸ்தலரின் நடபடிகளின் புத்தகம் கிறிஸ்தவத்தின் எளிமையின் செய்தியை முக்கியப்படுத்துகிறது. வெற்றியுள்ள சபையின் மகிமை என்னவெனில், மனிதர் சுவிசேஷத்தை பரிசுத்த அபிஷேகத்துடனும் தங்கள் தூய வாழ்வின் அனுபவத்தாலும் பிரகடனம் செய்தனர். நமது அனுதின வாழ்வையும் செயல்முறைகளையும் சோதித்துப் பார்த்தால் தற்கால சபையின் போங்கும் ஆவிக்குரிய நடையும் பெந்தெகோஸ்தே நாளுக்கு முந்தியது போலவே காணப்படுகிறது.

பெந்தேகோஸ்தே ஒரு புதிய அமைப்பின் ஆரம்ப நாளாகும். 'பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள்' என்ற புதிய புத்தகத்தின் முதல் பக்கம் என்று கூட கூறலாம், அல்லது "தூய ஆவியானவரின் சுயசரிதை" என்றும் சொல்லலாம். எப்படியும் அது ஒரு புதிய ஆரம்பம். ஆவிக்குரிய வாழ்வு, மற்றும் புதிய தொடர்பு, புதிய கூட்டுறவு, புதிய அதிகாரம், புதிய வல்லமை போன்றவற்றின் புதிய ஆரம்பமாகும்.

## ஏற்பட்ட மாற்றம்

இந்த புதிய வாழ்வு ஒரு புதிய ஐக்கியத்தையும் அதன் மூலம் கிறிஸ்துவுக்குள் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு புதிய இனத்தையும் உருவாக்கியது (1 கொரி. 12:13, 2 கொரி.5:17; 1 பேது.2:9) அபிஷேகத்தால் நிரப்பப்பட்ட அவர்கள் எங்கும் சுற்றித்திரிந்து தேவ வசனத்தைப் பிரசங்கித்தனர் அப்.8:4.

அவர்கள் செய்த சுவிசேஷப்பணி இயற்கையானது. அவர்கள் சுவிசேஷப் பணிக்கென தனி கூடுகைகளை நடத்தத் தேவை இருக்கவில்லை. பெரிய மாநாடுகளை நடத்தி இழந்துபோன ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க விசுவாசிகளைத் தூண்டவேண்டிய அவசியமிருக்கவில்லை. இப்படிப்பட்ட எண்ணங்கள் அவர்கள் மூளையில் உதிக்கவில்லை.

ஆவியினால் பூரிதமாக்கப்பட்டு, கிறிஸ்துவின் அன்பினால் நிரப்பப்பட்டவர்களாய் புதிய சந்தோஷத்தை அனுபவித்தவர்களாய் கிறிஸ்துவுக்குப் பணி செய்தனர். அது மூச்சுவிடுவதுபோல அவர்களுக்கு இயற்கையாயிருந்தது. அப்.4:20-ன் படி "நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்து நாங்கள் பேசாமலிருக்கக்கூடாதே." அது ஆவிக்குரிய பற்றியெரிதலாயிருந்தது.

அவர்களுடைய உற்சாகமும், தீவிரமும் மிக அதிகமாயிருந்தபடியால் எதிரிகள் வேகமாகக் கூட்டங்கூடி "இந்த சுவிசேஷப் பிரபல்யத்தை எப்படித் தடுக்கலாம்" என்றும் இன்னும் அதிகமாகப் பரவாதபடி என்ன செய்யலாமெனவும் ஆலோசித்தனர். அப்.4:15-17.

ஆனால் விசுவாசிகள் எவ்வளவாக துன்புறுத்தப்பட்டு, எவ்வளவாக அவமதிக்கப்பட்டார்களோ அவ்வளவாக அவர்கள் வலுவடைந்தார்கள். அவர்கள் மீது சுமத்தப்பட்ட பழி, "உலகத்தைத் தலைகீழாக மாற்றுகிறவர்கள்" அப்.17:6 என்பதாகும்.

அவர்கள் ஆவியானவரின் சூழ்நிலையில் வாழ்ந்து, ஆவியின் உற்சாகத்தை வெளிப்படுத்தி, ஆவியானவரின் வல்லமையோடு பிரசங்கித்து தூய ஆவியானவரின் அறுவடையைப் பெற்றனர்.

ஆனால் நாம் இன்று இத்தகைய ஆசீர்வாதமான அப்போஸ்தலர் காலத்தின் சூழலில் வாழவில்லை. நமது அரண்மனை போன்ற கட்டிடங்களும், நீண்ட அங்கத்தினரின் பட்டியல்களும், உயர்ந்த சம்பளம் பெறும் போதகர்களும் பெயர்பெற்ற சுவிசேஷர்களும் வல்லமையான கிறிஸ்தவத்திற்கு நிரூபணமல்ல.

இவ்வாறு மேற்பரப்பான வெற்றியான பகுதிகள் ஆதிகால திருச்சபையில் காணப்படவில்லை. எந்த ஒரு விசுவாசியும் இன்றைய திருச்சபைகளின் நிலைகளை ஆதிக் கிறிஸ்தவத்தோடு ஒப்பிட முடியாது. இன்று நாம் தேவ சன்னிதியில் அழுது ஜெபிக்க வேண்டும்.

இந்த நடு இரவு வேளையில் பரிசுத்த எச்சரிக்கை முழங்க வேண்டும். நாம் விலகி வந்திருக்கும் பயங்கரமான திருப்புதலிலிருந்து நம்மை தேவன் விடுவிக்க வேண்டும். தேவ பிள்ளையே அதுவே எழுப்புதல். நாம் நேர்பாதையில் வந்து புதுப்பிக்கப்பட வேண்டும்!

புலம்பலின் புத்தகத்தில் தீர்க்கதரிசி மீதியிருந்த தேவபிள்ளைகளின் நிலையை அதாவது சீயோனின் துக்கமான நிலையைக் கவனித்து வேதனையோடு அழுகிறதை வாசிக்கிறோம். "தேவரீர் என்றென்றைக்கும் எங்களை மறந்து நெடுங்காலமாக எங்களைக் கைவிட்டிருப்பதென்ன? கர்த்தாவே எங்களை உம்மிடத்தில் திருப்பிக் கொள்ளும்.... பூர்வ காலத்திலிருந்தது போல எங்கள் நாட்களை புதியவைகளாக்கும்" புலம்பல் 5:20-21.

## மனந்திரும்புதலும் துணிச்சலும்

உலகமனைத்திலுமுள்ள பரிசுத்தவான்களுக்கும் இவை தேவை. தேவனே, எங்களை எளிமைக்கும், வல்லமைக்கும் மறுபடியும் கொண்டு வருவீராக.

சபை தன்னை செத்த கிரியைகளுக்குப் பாதுகாவலாயிருக்க அனுமதித்து ஜீவனுள்ள விசுவாசத்தை எக்காளம் ஊதி அறிவிக்கத் தவறிவிட்டது. உயிர்த்தெழுதலின் எக்காளத்தை ஊதும்படி தேவன் நம்மை எதிர்பார்க்கும்போது நாம் பிரேதக் குழிகளைத் தோண்டும் மண் வெட்டியை வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறோம். லூக்.9:60-ன் படி மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும், நீ போய் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி".

ஆண்டவர் சபை ஒரு உத்தம வீரரின் சேனையாக எழும்ப வேண்டுமென்றிருக்கிறார். ஆனால் அது சுகவாழ்விலும், மார்க்கக் கூடுகைகளிலும் கவனம் செலுத்தி அதின் தூய பணியை மறந்துவிட்டால் அது தனிமைப் படுத்தப்பட்டுவிடும்.

வீழ்ச்சிக்கும் பிரிந்து போவதற்குமான மூன்று முக்கிய பாவங்களைக் குறித்து சிந்திப்போம்.

## ஆவியானவரின் வல்லமையை இழந்துபோகுதல்

பெந்தெகோஸ்தின் உபதேசத்தைக் குறித்து தர்க்கம் பண்ணுகிறோம். பிசாசு எள்ளி நகைக்கிறான். ஆத்துமாக்கள் மடிகின்றன. கிறிஸ்துவின் இருதயம் உடைகிறது. ஆவியானவர் துக்கப்படுத்தப்படுகிறார். சபை வல்லமையற்று காணப்படுகிறது.

விலையேறப்பெற்ற ஆவியானவரைக் குறித்து எந்த விசுவாசியுடனும் நாம் விவாதிப்பதில்லை. அவர்கள் அவரைக் குறித்து அறிந்திருக்கலாம், அறியாமலுமிருக்கலாம் (யோவான் 14:7; 2 கொரி.13:14) சரியான பதத்தை பயன்படுத்துகிறவர்கள் அனுபவம் இல்லாமலிருக்கலாம். தவறான பதத்தை பயன்படுத்துகிறவர்கள் சரியான அனுபவத்தை உடையவர்களாயிருக்கலாம்.

சபையின் இந்தப் பெரிய பிறப்பின் நாளைக் குறித்து நீங்கள் எந்த விளக்கம் கொண்டிருந்தாலும் ஒரு உண்மை மறுக்கமுடியாதது. பெந்தெகோஸ்தே நாள் வல்லமையுடன் தொடர்புடையது. ஆவியானவர் அருளப்பட்டதால் ஏற்பட்ட மிகப்பெரிய அற்புதம் சீஷர்களில் ஏற்பட்ட மாறுதலாகும். அது சாதாரண மீனவர்களையும் ஆயம் பிரிக்கிறவர்களையும் தீர்க்கதரிசிகளாகவும், போதகர்களாகவும் ஜுவாலிக்கும் தூதர்களாகவும் மாற்றிவிட்டது. அவர்களது பயமும், மென்மையும் பெந்தெகோஸ்தே நாளின் ஸ்நானத்தின் அக்கினியால் எரிக்கப்பட்டுவிட்டன.

பெந்தெகோஸ்தே நாளில் அருளப்பட்ட அங்கி, வலிமைமிக்க சால்வையாகும். அவர்கள் உன்னதத்தின் வல்லமையால் தரிப்பிக்கப்பட்டார்கள். அவர்களது வாழ்வில் தேவன் நிகழ்த்தியது உண்மையான தொடுதலாகும். அப்போஸ்தலர் நடபடிகள் பெந்தெகோஸ்தின் பின் தொடர்பான சரித்திரமாகும் லூக்.24:49, அப்.1:8.

இந்த புத்தகத்தில் வல்லமையின் அற்புதக் காட்சியைக் காணலாம். ஒவ்வொரு அதிகாரத்திலும், ஒவ்வொரு வசனத்திலும், ஒவ்வொரு சம்பவத்திலும் வல்லமை, இருப்பதைக் காணலாம். அவர்கள் சாட்சி கூறவும், பாடுபடவும், மரிக்கவும் வல்லமை பெற்றிருந்தார்கள்.

1904-ல் நடைபெற்ற வேல்ஸின் பலத்த எழுப்புதலைக் குறித்து சிட்னி ஈவான்ஸ் நேரடியாகப் பார்த்த அனுபவங்கள் நம்மை அதிர்ச்சியூட்டக் கூடியவை. இந்த எழுப்புதலுக்குக் காரணமா

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

யிருந்தவர் ஈவான் ராபர்ட்ஸ். இதைக் குறித்து "ஏதோ மிக அதிசயமானது நடைபெற்றது" என்று சரியாகக் கூறியுள்ளனர். **தூய ஆவியானவருக்குச் சரியான இடம் சபையில் அளிக்கப்படும் போது அற்புதங்கள் நிகழும்.**

அப்போஸ்தலர்களின் நடபடிகள் ஆதி அப்போஸ்தலர் காலத்தின் சபையின் பெரிய கொள்ளையாடுதலைக் காண்கிறோம். தங்கள் தேவனை அறிந்து கொள்ளும் ஜனங்கள் பலத்தவர்கள். அவர்கள் கொள்ளையிடுவார்கள் தானி.11:32.

அப்போஸ்தலர் நடபடிகள் ஒரு மிகப்பெரிய நூல். அதில் மிகப்பெரிய வல்லமையும் மிகப்பெரிய கிருபையும் காணப்படுகின்றன 4:33. அதோடு மிகப் பெரிய பயங்கரம் 5:11, மிகப்பெரிய அதிசயங்களும் அற்புதங்களும் 6:8 மிகப் பெரிய துன்புறுத்தலும் 8:1 மிகப்பெரிய சந்தோஷம் 8:8 மிகப்பெரிய பாடு 9:16 ஆகிய அனைத்தையும் காணலாம்.

நாம் வாழும் இந்தக் காலம் அற்புதமான காலம். ஆவியானவர் ஊற்றப்படும் காலம். ஸ்காட்ஸ்மான், சாமுவேல் ரூதர்போர்டு என்ற ஊழியர்கள், "ஆழமான தெய்வீக வாழ்விற்கு நான் தேவை என்று சொல்லுவது ஆவியின் அபிஷேகம் ஒன்றே" என்று குறிப்பிடுகிறார்கள். நாம் நமது புரட்டுப்பேச்சை விட்டுவிட்டு உத்தமமாக ஆவியானவரின் அபிஷேகத்தை நாடுவோம்.

**தூய ஆவியானவரின் ஆளத்துவத்தை மறுதலித்தல்**

அடுத்த மிகப்பெரிய பாவம் தூய ஆவியானவரின் ஆளத்துவத்தை மறுதலிப்பதாகும். சுவிசேஷ வட்டாரங்களிலும் கல்வியானது தூய ஆவியானவருக்கு முன்னதாக வைக்கப்படும் சமயங்களுமுண்டு.

நாம் அப்போஸ்தலனான பவுலைப் போன்ற சீரான கல்விமான்களுக்காக தேவனைத் துதிப்போம். எந்த ஒரு கிறிஸ்தவ பணியாளனுக்கும் முதல் முதலாக இன்றியமையாதது தூய ஆவியானவரின் அபிஷேகம்தான்.

பட்டங்களின் மீது சார்ந்திருப்பவர்கள் "பட்டங்களுடன் மரிப்பார்கள்". அவர்களில் ஆவியானவரின் வல்லமை இல்லை. சொந்த திறமையாலும், மனித கல்வி நிபுணத்தாலும் சுவிசேஷத்தை அறிவிக்கக்கூடிய ஒருவர் இருந்தால் அது நிச்சயம் பவுல்தான். ஆனால் தூய ஆவியானவரின் நிறைவுதான் அவரது மிக உன்னதமான தகுதியாக அவரது ஊழியத்தில் காணப்பட்டது அப்.9:15-17.

**உலகத்திற்கு ஒத்துப்போகுதல்**

உலகத்தோடு ஒத்துப்போகுதல் இன்னொரு பாவம். ஒரு முரட்டுத் தனமான திட்டம் சுவிசேஷ பணியாளர்களை உலக அமைப்புகளோடு இணையச் செய்கிறது. இது தூய்மையற்றது. கிறிஸ்து இவ்வுலக ஆசாபாசங்களிலிருந்து விடுவிக்க தம்மை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தது வீணாகுமே!

உத்தம விசுவாசிகள் எழுப்புதலுக்காக ஆண்டவரது முகத்தைத் தேடிக் கொண்டிருக்கும் சபைகளில் அங்கு அனேகர் உலக உல்லாசங்களில் ஈடுபட்டிருப்பதை நான் அறிவேன். தேவன்தாமே வல்லமையுள்ள ஊழியக்காரர்களை எழுப்பி இந்த நிலையினைக் கட்டுப்படுத்துவாராக. நாம் உத்தமமாக நிற்கவும் நமது ஆடைகள் கறைபடாமலிருக்கவும் வெள்ளியாலான எக்காளங்களை நமது உதடுகளில் வைத்து மகிமையான சுவிசேஷத்தை சத்தமாகக் கூறுவோம்.

(எரேமியா 6:14-16 படிக்க)

**ஆவியானவரை அலட்சியம் செய்தல்**

மாம்ச வழிகளையும், ஆவியானவரை அலட்சியம் செய்வதையும் அழிக்க விசுவாசம் வேண்டும். ஆவியானவரின் வல்லமையில்லாத சபை பயனற்றது.

சபை சரித்திரத்தில் ஒரு சிறு கூட்டம் மக்கள் தேவ ஆவியானவரின் கரத்தில் தங்களை ஒப்புவிப்பார்களானால் ஒரு புதிய பெந்தெகோஸ்து ஏற்படும். நாம் ஆவியானவரின் பலத்தில் உலகத்தின் முடிவு பரியந்தம் சுவிசேஷத்தை அறிவித்து நமது சொந்த அனுபவத்தோடு குருசிலறையப்பட்ட இயேசுவின் செய்தியைக் கூறுவோம்.

## எப்போதும் நிரம்பியிருத்தல்
### *Full all the time*

F.F. Bosworth (1877-1958)

ஒவ்வொரு பாவியையும் பார்த்து 'என்னிடம் வாருங்கள்' மத்.11:28 என்று இயேசு அழைக்கிறார். ஒவ்வொரு ஆவியால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவனிடமும் அவர் 'என்னில் நிலைத்திருங்கள்' யோவான் 15:4 என்கிறார். நாம் கிறிஸ்துவாகிய 'மெய்யான திராட்சைச் செடியில்' நிலைத்திருக்க வேண்டும் யோவா.15:1. இவ்வாறு அவரில் நிலைத்திருக்கும்படி தமது சீஷருக்குக் கற்பிக்குமுன் அவர்கள் தூய ஆவியால் நிரப்பப்பட வேண்டியது அவசியம் எனவும் கூறினார். இதன் மூலம் அவர்களுக்குத் தம்மையும் தமது பிதாவையும் வெளிப்படுத்தி அவர்களில் வாசம் பண்ணுவதையும் அவர்களின் சித்தத்திலும் அன்பிலும் மட்டுமல்ல வாழ்விலும் இயற்கையிலும் ஒன்றாயிருப்பதையும் தெளிவித்தார்.

ஆவியால் நிரப்பப்பட்டவர்களுக்கு அவர் கொடுக்கும் அழைப்பும் கட்டளையும் 'என்னில் நிலைத்திருங்கள்' என்பதாகும். அதாவது அவர் இப்போது விவரித்தபடியே வாழவேண்டும் என்பதாகும். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இந்த நிலையில் இன்னும் பிரவேசிக்கவில்லை. ஆவியின் நிறைவும் தெய்வீக வாழ்வும் தொடர்ந்து நம்மில் காணப்படுவது நமது ஆண்டவரின் சித்தம்.

ஆரோக்கியமான ஒரு திராட்சைச் செடியின் கொடிகள் நமது ஆண்டவரின் எதிர்பார்ப்பையும் அவரோடு இணைந்து வாழ்வதற்குரிய அழைப்பையும் நமக்குக் காண்பிக்கின்றன. இந்த இணைப்பு ஒரு ஜீவனுள்ள இணைப்பு. இந்த இணைப்பால் கொடிகள் எப்போதும் நிறைந்து காணப்பட முடியும். செடியின் ஜீவனும், சத்துநீரும் எப்போதும் இவற்றில் நிறைந்து காணப்பட முடியும்.

ஆவியினால் நிரப்பப்படாத ஒருவர் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவில்லை என்பதுதான் பொருள். எனவேதான் மெய்யான திராட்சச் செடியின் கொடிகளுக்கு தேவ கட்டளை 'ஆவியில் நிரம்பியிருங்கள்' எபே.5:18 என்பது. இதனால் மட்டுமே ஜீவன், சத்துப் பொருள், கனிகொடுத்தல் ஆகியவை தொடர்ந்து கிளைகளுக்கு அனுப்பப்பட முடியும்.

'என்னிடம் வாருங்கள்', 'என்னில் நிலைத்திருங்கள்' என்ற கிறிஸ்துவின் இரு அழைப்புகளும், 'ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன் யோவா.7:37-ல் சொல்லப்படும் அழைப்புக்கு சமமானவை. இவ்வாறு நாம் நிரப்பப்படும்போது நம்மில் ஜீவனுள்ள நதிகள் புறப்படும் 7:38. பானம் பண்ணக்கடவன் என்பது முழுமையாகப் பானம் பண்ணுவதைக் குறிப்பிடுகிறது. நம்மிலிருந்து வழிந்தோடுமட்டும் நாம் பானம் பண்ண வேண்டும். பாத்திரம் நிரம்பும் வரை வழிந்தோடுவதில்லை. ஆக ஆரோக்கியமான கொடி எப்போதுமே செடியின் ஜீவனாலும், சாரத்தாலும் நிரம்பியிருக்க வேண்டும். அரைகுறையாயிருக்கக் கூடாது.

தாகமாயிருக்கிறவர்களைக் குறித்து 'அவர்கள் திருப்தியடைவார்கள்' மத்.5:6 என்று இயேசு கூறினார். ஆவியினால் நிரம்பியிருங்கள் என்பது திருப்தியான நிரப்பப்பட்ட வாழ்வினைக் குறிக்கிறது. கொடியானது செடியின் முக்கிய பகுதிகளை விட சிறிதாகயிருந்தாலும் செடியில் காணப்படும் நிறைவு இங்கும் காணப்படும். இவைகளில் தான் கனிகள் ஏற்படும்.

**ஆவி உயிர்ப்பிக்கிறது**

தூய ஆவியானவர் தம்மால் மக்கள் நிரப்பப்படுவதற்காக விரும்புவதன் காரணத்தைத் தெரிந்திருந்தால் உலகின் அனைத்துக் கிறிஸ்தவர்களும் ஆவியால் நிரப்பப்படும்வரை ஜெபித்துக் கொண்டேயிருப்பார்கள். அவருடைய காரணங்களில் ஒன்று நமது முழு ஆவி ஆத்துமா சரீரம் எல்லாம் தொடர்ந்து உயிர்ப்பிக்கப்பட அவரது அதிசய பணியில் தடை ஏற்படக்கூடாது என்பதே.

யோவா. 6:63-ல் "ஆவியே உயிர்ப்பிக்கிறது" என்று இயேசு சொன்னார். ஆவி ஜீவனையளிக்கிறது. அவரைக் குறித்து ரோமர் 8:2-ல் 'ஜீவனுடைய ஆவி' என்று படிக்கிறோம். தேவனுடைய சரீரங்களுக்கும், ஆத்துமாக்களுக்கும் உண்மையான ஜீவாதாரமான இயேசு

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

வின் அச்சடையாளமான ஜீவனை தொடர்ந்து அளித்துக் கொண்டிருப்பது தான் அவரது பணி. அவரது பரிபூரண செயலான உயிர்ப்பித்தலுக்கு (நமது சரீரம், ஆத்துமா, ஆவி இவற்றின் தெய்வீக வாழ்வு பெருகுவதில்) தடை ஏற்படும்போது ஆவியின் நிறைவு நம்மில் காணப்படாது.

"நானோ, அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப் படவும் வந்தேன்" யோவா.10:10 என்று இயேசு கூறினார். நாம் ஆவியினால் நிரப்பப்படும் வரைக்கும் அவர் விரும்பும் அளவில் அவரது ஜீவன் நம்மிலிருப்ப தில்லை. கிறிஸ்து கட்டளையிட்ட நிலைத்திருக்கும் அனுபவம் நாம் ஆவியில் நிரம்பி இருக்கவும் அதன் மூலம் ஆவியானவர் தொடர்ந்து நம்மை உயிர்ப்பிப்பதின் தடைகள் அகற்றப் படவும் ஏதுவாகும்.

119-ம் சங்கீதத்தில் தாவீது, 'உயிர்ப்பித்தல்' என்ற பதத்தை பதி னொரு முறை பயன்படுத்துகிறார். நமது அனைத்து பலவீனங்களுக்கும் விடுதலை தருவது அவரது அதிகமான ஜீவன் என்பதை தாவீது அறிந்திருந்தார். எதற்காக நாம் ஜெபிக்க வேண்டும் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். தாவீது உயிர்ப்பிக்கப்பட்டதும், அதிக மானதும், பெருகினதுமான வாழ்வை வாஞ்சித்தார். எனவே 'உமது கிருபையின் படியே என்னை உயிர்ப்பியும்' என்று ஜெபிக்கிறார் சங்.119:88. அவரது கிருபை மேலானது. அது நாம் அதிக அளவான ஜீவனைப் பெற ஏதுவாகும்.

### உம்முடைய வார்த்தையின்படி

119-ம் சங்கீதம் 25-ம் வசனத்தில் 'உமது வசனத்தின்படி என்னை உயிர்ப் பியும்' என்று தாவீது ஜெபிக்கிறார். இந்த உள்ளடக்கமும், தூண்டுதலுமான ஜெபத் தின் மூலம் விசுவாசத்தினால் ஒவ்வொரு நாளும் நாம் பதிலைப் பெற முடியும். உயிர்ப்பித்தல் தேவ வசனத்தின்படி நடைபெறுகிறது.

வேதவசனம் தேவனுடைய ஆவி யின் தூண்டுதலால் எழுதப்பட்டது. அது அவர் நிறைவேற்றும் மிகப்பெரிய பணி யாகிய உயிர்ப்பித்தல் நடைபெற அடிப் படையாயிருக்கிறது. எனவே உயிர்ப் பிக்கப்படுதல் என்பது வேத வசனத்தின் படி நமது சரீர, ஆத்மீக, ஆவிக்குரிய வாழ்வில் அவரது முழுமையான வாழ்வு நிறைந்திருப்பதைக் குறிக்கிறது.

கிறிஸ்துவில் "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக அவ ருக்குள் வாசமாயிருக்கிறது" கொலோ.2:9. எனவே திராட்சச் செடியிலுள்ள அனைத் தையும் நாம் முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியும். நிலைத்திருக்கும் கொடி ஜீவனுடையதாயிருப்பது மட்டு மல்ல அது முழுமையாகவும் அனைத்துக் காலமும் நீடிக்கிறதுமாயிருக்கிறது. ஆவி யானவரின் நிறைவும் தொடர்ந்து தடங்க லில்லாத உயிர்ப்பித்தலும் "ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் முற்றிலும் பரிசுத்தமாக்கப்படவும் காக்கப்படவும்" ஏதுவாயிருக்கிறது 1 தெச.5:23. பவுல் 'சாவுக்கேதுவான சரீரங்களையும் ஆவி யானவர் உயிர்ப்பிப்பார்' என்று ரோமர் 8:11-ல் எழுதுகிறார். "சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவன் விளங்கும்படி" என்று 2 கொரி. 4:11-ல் படிக்கிறோம். கிறிஸ்துவின் குணமாகுதல் தேவையானால் ஆவியான வர் மாற்.11:24-ல் கூறியிருக்குமளவில் நிறை வேறும்படி தேவனுக்குக் காத்திருங் கள். எதை நாம் கேட்டாலும் ஜெபிக்கும் போது அவற்றைப் பெற்றுக்கொள்வோ மென்ற விசுவாசம் வேண்டும். எனவே தெய்வீக உயிர்ப்பித்தலுக்கும் இது பொருத்தமானது.

நாம் ஒவ்வொரு நாளும் 'உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்' என்று ஜெபிப்போம். இது தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பதும். வேதவசனம் நமக்கு வெளிப்படுத்தும் உண்மையு மாகும். தேவன் நம்மிடம் எதை அதிக மாக எதிர்பார்க்கிறார் என்பதை ஒவ்வொரு முறையும் வேதத்தில் காணும் போது சந்தோஷப்பட்டு உற்சாகமடை யுங்கள். ஏனெனில் இது ஆவியானவரின் கிரியை. நமது பணியல்ல.

ஒவ்வொரு நாளும் இது உங்கள் முதல் ஜெபமாயிருக்கட்டும். ஏனெனில் நூற்றுக்கணக்கான பிற ஆசீர்வாதங் களைப் பெற இதுவே நிபந்தனை. இதுவே தேவனுடைய நற்குணத்தின் சகல நன்மைகளையும் பெற்றுக் கொள்ளும் வழி. தேவ வசனத்தில் நம்மைக் குறித்து வெளிப்படுத்தப்பட் டிருக்கும் எல்லாம் நம்மில் நிறைவேற தூய ஆவியானவர் நம்மை உயிர்ப்பிக்க விரும்புகிறார்.

119-ம் சங்கீதம் 50-ம் வசனம், 'உம்முடைய வாக்கு என்னை உயிர்ப் பித்தது' என்று கூறுகிறது. ஆவியானவர் தேவ வசனத்தின் மீது நமக்கிருக்கும் நம்பிக்கையின் அளவில் நம்மை உயிர்ப் பிக்கிறார். நம்மை வேதவசனத்தில் காணும் வாக்குத்தத்தம் அல்லது கட்டளையின்படி உயிர்ப்பிக்கிறார். அந்த உயிர்ப்பித்தல் நம்மை மகிமையின் மேல் மகிமையடையச் செய்கிறது 2 கொரி.3:18. தேவனுடைய வார்த்தை ஆவியாகவும் ஜீவனாகவுமிருக்கிறது. அது வெளிப்படுத்துகிற யாவற்றையும் சரியாக நிறைவேற்றும். நாம் உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும் என்று ஜெபிக்கும்போது நாம் அவருடைய சித்தத்தின்படி ஜெபிப்ப தால் பதிலைப் பெறுவது நிச்சயம்.

"அவருடைய வசனத்தின்படி" என்பது அவருடைய வாக்குத்தத்தங் களின்படியும், அவருடைய கட்டளை களின்படியும் எனப் பொருள்படும். வசனம் எவ்வளவாக கேட்கப்படுகிறதோ அவ்வளவு அதிகமாக உயிர்ப்பித்தலு மிருக்கும். எப்போது நாம் குறைவு படுவதாக உணர்ந்தாலும் "என்னை உயிர்ப்பியும்" என்று ஜெபிக்கும் மகிமை யான வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். நாம் ஒவ்வொரு நாளும் உயிர்ப்பிக் கப்பட வேண்டும். தேவன் நமது வாழ்வைப் பெருகச் செய்வாராக.

## ஹெரால்டு வோயல்கெல் : கொரியாவில் முள்கம்பிகளுக்கு பின்னால்

## *Harold Voelkel - Behind Barbed wires in Korea*

Jack Voelkel

1950-ம் ஆண்டு ஜூன் மாதம் வடகொரிய படை தென் கொரியாவை பயங்கரமாக முற்றுகையிட்டது. எனது குடும்பத்தாரும் இன்னும் அனேக அயல்நாட்டு மிஷனெரிகளும் ஜப்பா னுக்குத் தப்பி ஓட வேண்டியதாயிற்று. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கைப் பெட்டியுடன் விரைந்தோம். இரண்டு வாரங்களுக்குப் பிறகு எனது தந்தை ஹரால்டு வோயெல்கெல் எங்கள் ஐந்து பேரை (மனைவி மற்றும் 4 பிள்ளைகள்) குடும்ப தியானத்திற்காக மாலையிலே வழக்கம்போல அழைத்தார்கள். அப்போது அவர்கள் ஒரு விசேஷித்த ஜெப விண்ணப்பத்தை எங்கள் முன் வைத்தார்கள்.

"நாம் இப்போது ஜப்பானில் இருக்கிறோம். கொரியாவில் யுத்தம் எத்தனை காலம் தொடரும் என்பது தெரியவில்லை. நாம் ஐக்கிய நாட்டிற்குத் திரும்பிவிடுவோமா? இங்கு ஜப்பானிலே தங்கிவிடுவோமா? நாம் இவற்றை அறிய முடியாவிட்டாலும் ஆண்டவர் அறிவார். நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் தெளிவாகக் காண்பிக்கும்படி நாம் ஜெபிப்போம்."

ஒரு வாரத்திற்குப் பின்னால் எனது தந்தைக்கு அமெரிக்க படை யிலிருந்து கொரியாவுக்கு திரும்பி வரவும் தென்கொரிய படைக்கு இராணுவத் தைச் சேராத போதகராகப் பணியாற்ற வும் அழைப்பு வந்தது. தென் கொரியப் படை அமெரிக்க படைப் பிரிவுடன் சேர்க்கப்பட்டிருந்தது. அவருக்குத் தளபதி என்ற பதவி அளிக்கப்பட்டி ருந்தது. நாங்கள் மூன்று சகோதரரும் தாயாரும் ஜப்பானில் தங்கியிருந்து அமெரிக்க சேனைகளுக்கு அளிக்கப் படும் வீட்டில் வசிக்கவும் அங்குள்ள பாடசாலையில் படிக்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. எங்கள் சகோதரி அமெரிக்காவிலுள்ள ஒரு கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள்.

செப்டம்பர் மாதம் தந்தை கொரியா திரும்விட்டார். 150,000 வட கொரிய போர்க்கைதிகள் வடகொரிய தளபதி மற்றும் ஐக்கிய நாடுகளின் படைகளால் பிடிக்கப்பட்டனர். அவர் கள் கோஜே என்ற தீவிற்கு 10 முகாம் களில் 15000 பேர் வீதம் அனுப்பப் பட்டனர். இந்தத்தீவு தீபகற்பத்தின் தென் கடற்கரை ஓரமாக உள்ளது.

எனது தந்தை பிரின்ஸ்டன் கல்லூரியில் இறையியல் கற்றவர். மேலும் பிரின்ஸ்டன் கலாசாலையில் தத்துவ

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

சாஸ்திரத்தில் முதுநிலை பட்டமும் பெற்றிருந்தார். ஆனால் சுவிசேஷ ஊழியத்தில் அவர்களுக்கு அதிக வாஞ்சை இருந்தது.இறையியல் கல்விக்கு முன்பு அவர் மூடியின் வேத பாடசாலையில் படித்தார். அங்கு சிக்காகோவிலுள்ள தெருக்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அவர் போதிக்கப்பட்டார். கடந்த ஆண்டுகளில் இளம் மிஷனெரிகளுக்குத் திறந்த வெளியில் சுவிசேஷம் அறிவிக்கும் பயிற்சியும் கொடுத்துள்ளார். நான் இளம் வாலிபனாயிருந்தபோது எனது வாத்தியக்கருவியில் இசை மீட்டி பாடல்கள் பாடி கூடுகைக்கு மக்களை சேர்க்க உதவி செய்ததுண்டு. மக்கள் கூடி வந்தபோது எனது தந்தை தெளிவான திருஷ்டாந்தங்களாலும், வேடிக்கையான கதைகளாலும் அவர்களது கவனத்தை இழுத்து வல்லமையான சுவிசேஷ பிரசங்கத்தை அவர்கள் உள்ளங்களில் பதியச் செய்வார்.

150,000 கொரியன் போர்க் கைதிகள் முகாம்களில் வைக்கப்பட்ட செய்தி அவருக்கு இணையற்ற சுவிசேஷ வாய்ப்பைப் பெற்றுத் தந்ததாக உணர்ந்தார். ஒரு இடமாற்றத்திற்காக விண்ணப்பித்த அவர் அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதில் மூழ்கிவிட்டார். அப்பணியில் அவர் உயர்வான வரம் பெற்றவர். இங்கு அவரது முதல் அனுபவங்கள் பயம் நிறைந்ததும், கந்தை அணிந்ததும் பசியால் வாடினதுமான மக்களை சந்தித்ததாகும். ஒரு அமெரிக்கர் படையினரின் சீருடையுடன் கொரிய மொழியில் நல்ல மொழி நடையில் பேசுவதைக் கேட்டு அவர்கள் ஆச்சரிய மடைந்தனர். அவர் 20 ஆண்டுகள் கிராமங்களின் வேதபாடசாலைகளிலும் போதித்து நல்ல பயிற்சி பெற்றிருந்தார்.

“முதலில் அவர்கள் என்னைக் குறித்தும் எனது கேள்விகளைக் குறித்தும் சந்தேகமுடனிருந்தனர். ஆனால் நான் ஒரு மிஷனெறி என்று உணர்ந்தபோது அவர்கள் விரைவில் நம்பிக்கை அடைந்தனர். ஒரு நிமிடத்தில் அவர்கள் இதயப் பூர்வமாக பாடல்கள் பாடவும் வேத வசனங்களை மனப்பாடம் செய்யவும் ஆரம்பித்தனர். ஒரு சிறிய செய்தியைக் கூறி ஜெபத்துடன் கூடுகையை முடித்தேன்” ...... (வோயெல்கல்)

அனேகக் கூடுகைகள் தொடர்ந்தன. விரைவில் 10,000 ஆண்கள் ஒலிப்பெருக்கி பயன்படுத்தாமலே செய்தி கேட்டனர். ஞானப்பாடல்கள், சுவிசேஷப் பாடல்கள் ஆகியவற்றின் வார்த்தைகள் பெரிய எழுத்துக்களில் காகிதங்களில் அச்சிடப்பட்டு தெளிவாகத் தெரியக்கூடிய இடங்களில் கூட்டத்தினிடையில் வைக்கப்பட்டன.

> பொருளாதார ஆசீர்வாதங்களையும் உடலுக்கடுத்த நன்மைகளையுமே பிரதானமாய்க் கொண்டுள்ள நவீன உபதேசம் ஒரு கொள்ளை நோய்போலக் கிறிஸ்தவத்தில் பரவியுள்ளது பிலிப்பியர் 3:17-19. இது **“வேறொரு சுவிசேஷம்”**.

அவைகளில் ஒன்று: ‘**அவரை மட்டும் நம்புங்கள்**’ என்பது.

**பாவத்தால் அமிழ்ந்து போன ஆத்துமாவே வா**

**ஆண்டவரிடத்தில் இரக்கமுண்டு**

**அவர் நிச்சயமாக உனக்கு இளைப்பாறுதல் தருவார்**

**அவருடைய வார்த்தையை நம்பு**

**அவரை மட்டும் நம்பு, அவரை மட்டும் நம்பு**

**இப்போது அவரை மட்டும் நம்பு**

**அவர் உன்னை இரட்சிப்பார், அவர் உன்னை இரட்சிப்பார்**

**இப்போதே அவர் உன்னை இரட்சிப்பார்**

எந்தக் காலத்துக்கும் தகுந்த விலையேறப் பெற்ற இந்த வார்த்தைகள் சமீபத்தில் போரிலீடுபட்டு வாழ்வை பயப்படுத்தும் அனுபவங்களைப் பெற்று முள்கம்பி வேலிகளால் சூழப்பட்டு, தங்கள் குடும்பத்தினரிடமிருந்தும் அருமையானவர்களிடமிருந்தும் பிரிக்கப்பட்டு, எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று ஏங்கிய மக்களுக்கு மிகவும் விலையேறப் பெற்றவைகளாயிருந்தன.

என் தந்தை அடிக்கடி அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி அழைப்புகளைக் கொடுத்தார். அனேகர் ஏற்றுக்கொண்டனர் அவர்களில் சிலர் கிறிஸ்தவர்களாகவே இருந்துள்ளனர். அவர்கள் வடகொரிய படையினால் கட்டாயமாக சேர்க்கப்பட்டவர்கள். சிலர் எந்தக் குற்றமும் செய்யாத வழிப்போக்கர். சில சபைத் தலைவர்களும் இடம் பெற்றிருந்தனர். அவர்களில் 9 மூப்பர்கள் 18 சுவிசேஷகர்கள் 35 வேதபாடசாலை மாணவர்கள், அதோடு ஒரு போதகரும் உட்படுவர்.

மேற்கூறிய தலைவர்களும் ஸ்தல போதகர்கள் சிலரும் உதவிக்காக அழைக்கப்பட்டு சிறைமுகாமில் புதிய விசுவாசிகளுக்கு தொடர்பணிகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. அவர்களில் புதிய கிறிஸ்தவர்களை ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படுத்தி, அதற்காக எழுத்துப் பரீட்சைகள் கவனமாக அளித்து அவர்கள் எடுத்துக் கொண்ட பாதையின் முக்கியத்துவத்தையும் முழுவதுமாகப் புரிந்துகொள்ளச் செய்தனர். மூன்று ஆண்டுகள் சிறைக் கைதிகளாக இருந்தவர்களில் சுமார் 15000 பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

அமெரிக்காவின் வேதாகம சங்கம் கப்பல் மூலமாக வேத பகுதிகள், புதிய ஏற்பாடுகள், கொரிய மொழியில் சில முழு வேதாகமங்கள் ஆகியவற்றை அளித்து கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் வளர உதவி செய்தனர். காலப்போக்கில் 15 வேதாகம ஸ்தாபனங்கள் இக்கைதிகளின் முகாம்களில் ஸ்தாபிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கானோருக்கு வேத ஆராய்ச்சி, ஆங்கிலம், இசை, கிறிஸ்துவின் வாழ்க்கை, மலைபிரசங்கம், சபை வரலாறு, வெஸ்ட்மினிஸ்டர் ஞானோபதேசம் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட கூடாரத்திலுள்ள அனைவரும் கிறிஸ்தவர்களாகிவிட்டால் அக்கூடாரத்தின் உச்சியில் ஒரு சிலுவையை நிறுத்தி தாங்கள் வசிக்குமிடத்தை வகுப்பறையாக தாமாகவே அளித்தனர்.

வேதத்தைப் படிப்பதற்காகவும் மனப்பாடம் செய்யவும் அவர்களைத் தூண்டும்படி என் தந்தை ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதிக அளவிலான வசனங்களை மனப்பாடம் செய்பவர்களுக்கு பரிசுகள் வழங்குவதாக அறிவித்தார். அனேகர் வந்து வேதபுத்தகத்திலுள்ள அனேக அதிகாரங்களை மனப்பாடமாகக் கூறினர். யூஜுன் போகி என்பவர் மத்தேயு சுவிசேஷம் முழுவதையும் மனப்பாடமாகக் கூறினார். தொடர்ந்து 5 பேர் வெளிப்படுத் தின விசேஷம் முழுவதையும் மனப்பாடமாகக் கூறினர்.

அதிகாலை ஜெபக்கூடுகைகள் கொரியா திருச்சபையின் அடையாளமாயிருந்தது. கிறிஸ்தவ கைதிகளும் இதைப் பின்பற்றினர்.

1951 நவம்பர் மாதம் ஒரு கிறிஸ்தவ பத்திரிகையின் ஆசிரியரான ஹெரால்டு ஃபேய் என்பவர் கோஜே தீவிலுள்ள ஒரு அதிகாலை கூடுகைக்குச் சென்றார். இருளாகவே இருந்த அந்த நேரத்தில் 4600 சிறைக் கைதிகள் பாடல்களைப் பாடுவதைக் கேட்டு, “நான் இப்படிப்பட்ட எதையும் பார்க்க எதிர்பார்க்கவேயில்லை” என்று விளம்பரம் செய்தார்.

1951 கோடைகால நடுவில் வடகொரியர்களுக்கும் ஐக்கிய நாடுகளின் படைகளுக்கும் சமாதானப் பேச்சு நடந்தது. அப்போது ஏற்பட்ட குழப்பத்தில் 85-வது விளாகத்தில் வசித்த 16 கைதிகள் கொல்லப்பட்டனர். அதில் 6 கிறிஸ்தவர்களுண்டு. அவர்களில் இருவர் டீக்கன்மார். புரட்சி ஓய்ந்து புரட்சியாளர்கள் தனிமைப்படுத்தப்படுமுன் ஒரு படைத்தளபதியும் சிறையிலடைக்கப்பட்டார்.

கிறிஸ்தவர்கள் வடகொரியாவுக்கு திரும்பி வருவதற்கான பேச்சுக்களைக் கேட்டபோது அவர்கள் தங்கள் சொந்த இரத்தத்தால் விண்ணப்பங்களை எழுதினர். அதில் தாங்கள் திரும்பி வந்து பொதுவுடைமைக் கட்சிக்குக் கீழ் வாழ்வதை விட சாவதே மேல் என விளம்பரமும் செய்தனர். எனவே ஐக்கிய நாடுகள் ஒவ்வொரு கைதியும் வடகொரியா திரும்புவதா இல்லையா என்பதை தாங்களே தீர்மானிக்க அனுமதித்தனர். 60000 கைதிகள் தென் கொரியாவில் தங்கிவிட்டனர். மற்றவர்கள் புறப்பட்டுச் செல்வதை என் தந்தை பார்த்துக்கொண்டே நின்றார். தென் கொரியா இன்னும் யுத்த அழிவின் தடயங்களிலிருந்து மீளவில்லை. எனவே இவர்கள் நாட்டைத் திரும்பக்கட்டுவதிலும், இருந்த கிறிஸ்தவர்களை இணைத்து சபையாக்குவதிலும், புதிய சபைகளை நாட்டுவதிலும் ஈடுபட்டனர்.

எனது தந்தை ஓய்வுபெற்றபோது ஒரு விலையேறிய தாக்கீதை தனது சுவரில் தொங்கவிட்டார். அதில் 131 பேருடைய புகைப்படங்களிருந்தன. அவர்கள் கல்லிக்கழக தொப்பியும் அங்கியுமணிந்தவர்களும், வேத சாஸ்திர

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)
பண்டிதர்களுமாவர். இவர்களனைவரும் போர்க்கைதிகள். பின் நாட்களில் அனேகர் மிஷனெறிகளாகவும் பணி செய்தனர்.

நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு சீயோலிலுள்ள ஒரு அழகிய உணவு விடுதியில் உணவருந்த சில கொரியர்களால் அழைக்கப்பட்டேன். அவர்கள் முந்தைய போர்க்கைதிகள். அவர்கள் தங்கள் அசாதாரணமான அனுபவங்களைக் கூறி, அவர்களது கைது நாட்களில் என் தந்தை செய்த உதவிகளுக்கு ஆழ்ந்த நன்றி கூறினர். அவர்களில் ஒருவர் ஒரு கோடீஸ்வரர். அவர் ஒரு ஆலயம் கட்டவும் பெண்களுக்கான ஒரு உயர்நிலைப் பள்ளி கட்டவும் பொருளாதார உதவி செய்திருக்கிறார். இன்னொருவர் 2500 மாணவர்களைக் கொண்ட ஒரு இறையியல் கல்லூரியின் தலைவர். மூன்றாம் நபர் 7000 அங்கத்தினரைக் கொண்ட ஒரு சபையின் போதகர். தேவன் இம்மட்டும் செய்திருக்கிற நன்மைகளை எண்ணும்போது என் கண்ணீரை அடக்க முடியவில்லை. இத்தகைய கொடிய யுத்த காலத்தில் தேவன் தமது நற்குணத்தால் அனேகரை விசேஷித்த விதமாய் சந்தித்திருக்கிறார் என்பது ஆச்சரியமானது. அந்த நாட்களின் அனுபவங்களை என் தந்தை இவ்வாறு எழுதியுள்ளார்.

“போர்க்கைதிகளின் மத்தியில் செய்த பணி மிகுந்த சந்தோஷத்தை அளிக்கிறது. அது எனது வாழ்வில் மிகுந்த பலனைத் தந்த ஊழியம் என நம்புகிறேன். ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் மக்கள் மத்தியில் தேவ கிருபையால் சபைகளும், வேத மாநாடுகளும், வேத ஸ்தாபனங்களும் ..... தேவன் வழிகாட்டி, பாதுகாத்து வளர்த்து பாதையெல்லாம் நடத்தியிருக்கிறார். தேவன் தமது கரத்தை ஆச்சரியமாக விளங்கப்பண்ணினார். இந்தப் பணியில் சில வேளைகளில் ஆச்சரியத்தால் நான் நகைத்தேன்..... தேவன் இரட்சித்து, பயிற்சித்து, தூண்டி எழுப்பி மனிதர்களை பிரகாசிக்கும் கிறிஸ்தவ வாழ்வுடையவர்களாக முள்வேலிகளுக்குப் பின்னால் ஏற்படுத்தினார். இது அவருடைய இன்னொரு பரிசுத்த ஆச்சரியம்”.

கடைசி நாட்களில் ஆரோக்கிய உபதேசிகளை விடத் துர்வுபதேசிகளும் கள்ளத்தீர்க்கதரிசிகளுமே திரளாய்க் காணப்படுவர் மத்.24:11

# அனேக சபைகள் தெய்வீகமாயிருப்பதற்குப் பதிலாக மேலோட்டமாக இருக்கின்றன

## *Too many churches are superficial rather than supernatural*

Fred D. Jarvis

இன்று நாம் நம்பிக்கையற்ற காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதற்கு ஏற்ப நிவாரணங்களும் தேவை. அனேகக் கிறிஸ்தவர்கள் வழக்கம்போல இன்னும் வியாபாரம் தான் செய்து கொண்டிருக்கிறார்கள். வீடு, வசதிகள், சொகுசு, அன்பானவர்கள், இன்பங்கள் போன்றவற்றிற்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. தேவனுடைய காரியங்கள் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்படுகின்றன. அனேகக் கிறிஸ்தவர்கள் நிறைவேற்றப்படாத பணியைக் குறித்துக் கரிசனையற்றவர்களாயிருக்கிறோம். சபைகள் தெய்வீகமாயிருப்பதற்குப் பதிலாக மேலோட்டமானவைகளாயிருக்கின்றன. நமது நினைவிலோ, ஜெபத்திலோ, செயலிலோ எழுப்புதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இடைவிடாமல் ஜெபிப்பவர்களில்லை. அனேகர் நெருப்பை இழந்துவிட்டதோடு தேவனுக்குரிய ஆழமான அனுபவங்களின் வாஞ்சையை இழந்துவிட்டனர்.

இந்த நிலை மாற வேண்டும். புதிய பெந்தேகொஸ்திற்குரிய கிரயம் செலுத்தப்பட வேண்டும். எழுப்புதல் வந்தே ஆக வேண்டும். தூய ஆவியானவர் பொழியப்பட வேண்டும். மக்கள் தேவனுக்கு நேராகத் திரும்ப வேண்டும். புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவ வல்லமையின் அனுபவம் ஏற்படும் வரை சபை ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். தேவன் நம்மை சுத்திகரித்து பயன்படுத்தவும் வெறுமையாக்கி நிரப்பவும் விரும்புகிறார். அவர் இரண்டாம் தரமும், கீழ்த்தரமுமான பரிசுத்தவான்களை முதல்தரமான ஆத்தும ஆதாயப் பணியாளர்களாக ஆக்க விரும்புகிறார். அது சாத்தியம். நம்பிக்கையற்றதும், கிறிஸ்துவற்றதுமான நிலை மாற வேண்டும்.

எழுப்புதலின் ஆசீர்வாதம் பாதுகாக்கப்பட்ட இரகசியம் அல்ல. பரலோக வாசல்களைத் திறக்கும் திறவுகோல்கள் பூட்டி வைக்கப்படவில்லை. நமது நாட்டு சபைகளும் உலகமெங்குமுள்ள சபைகளும் சுவிசேஷம் அறிவிக்க உலக எழுப்புதல் ஒன்றே வழி. இதுவே உயர்ந்த நோக்கமாயிருக்க வேண்டும்.

எழுப்புதல் திடீரென ஏற்படுவதில்லை. மக்கள் தேவனுக்காகப் பசிதாகமுள்ளவர்களாக்கப்பட வேண்டும். நாம் மக்களுடைய கவனத்தைப் பெறும் போதுதான் அவர்களை மந்தைக்குள் கொண்டு வர முடியும். சில எழுத்துக்கள் கோடிக்கணக்கான மக்களை சிந்திக்கச் செய்யும். நாங்கள் ஆவியானவருக்குச் சொந்தமான எழுப்புதல் சத்தியங்களைத் தெரிந்தெடுக்கும்படி வாஞ்சிக்கிறோம். அப்படிப்பட்ட எழுப்புதல் சத்தியங்கள் இலவசமாக உலகமெங்கும் அனுப்பப்படுகின்றன.

நிச்சயமாகவே, ஜெபத்திற்கான ஊக்கமான அழைப்பும், ஜெபத்திற்காகவும், தேவனோடு நடப்பதற்காகவும் கொடுக்கப்படும் அழைப்பும் இன்றியமையாதவை. நாம் ஆண்டவரின் இரண்டாம் வருகையை மிகவும் நெருங்கி வந்துவிட்டோம். சபை லவோதிக்கேயா சபையின் நித்திரையை விட்டு எழும்பியே ஆக வேண்டும்.

இந்த செய்திகள் உலகிலுள்ள சபைகளை எழுப்புதலடையச் செய்ய ஏதுவாயிருக்குமென எண்ணி ஆண்டவரைத் துதிக்கிறேன். பத்திரிகைகள் பாவத்திற்கும் சாத்தானுக்கும் எதிராகப் போராட மிகுந்த ஆதரவாயிருக்கின்றன. சாட்சிகள் தேவன் உங்கள் தியாகமான காணிக்கைகளை ஆசீர்வதிக்கிறார் என்பதனை உலகமெங்கிலும் அறிய முடிகிறது. எனவே இன்னும் அதிகமான மக்கள் பத்திரிகை மூலம் ஆசீர்வதிக்கப்பட வாஞ்சையோடிருக்கிறோம்.

கொழுத்த சம்பளம் வேண்டுமென்று பைத்தியமாய் அலையும் நமது இன்றைய வாலிபர், நங்கையர் காதுகளில் அன்று பணக்கார வாலிபன் ஒருவனிடத்தில் இயேசு சொன்ன வார்த்தைகளை உரக்க ஒலிக்க வேண்டும் : “உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்கு கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றி வா” மத்.19:21.

Registered with the Registrar of News Paper
For India under R.N.I. TN TAM 11967/’67
Date of Publication : 27th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

Book Packets contains periodicals

To

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason